# அவுஸ்திரேலியா

# வளர்நிலை 2

அரை ஆண்டுப் பரீட்சை

2005

சுட்டெண் **(Index) :**

**!. பின்வரும் பந்தியை வாசித்து, கீறிட்ட இடங்களை நிரப்புக.** (2x5=10)

பூனை ஒரு வீட்டு மிருகம்.
பூனைக்கு இரவில் நன்றாகக் கண் தெரியும்.
அதன் பாதங்கள் மெத்தென்று இருக்கும்.
அதன் நகங்கள் மிகவும் கூர்மையானவை.
அது தன் நகங்களை பாதங்களுள் மறைத்துக் கொள்ளும்.
பூனை குட்டி போட்டு அதற்குப் பால் கொடுக்கும்.
அது எலி பிடிக்கும்.
அது பால், மீன், இறைச்சி முதலியவற்றைச் சாப்பிடும்.

**கீறிட்ட இடங்களை நிரப்புக.**

பூனை ஒரு சிறிய ------------- மிருகம்.

அதற்கு இரவில் நன்றாகக் -------- தெரியும்.

அதன் ----------- மிகவும் கூர்மையானவை.

அது ----- பிடிக்கும்.

பூனை ------- போட்டுப் பால் கொடுக்கும்.

2. **சரியான சொல்லின் கீழ் கீறிடுக.** (2x5=10)

(அவர்கள் , அவன்) கோயிலுக்குப் போனார்கள்.
(நான் , நாங்கள் ) நல்ல மாணவர்களாக வரவேண்டும்.
(அவர் , அவர்கள்) எனக்குக் கணித ஆசிரியராக இருந்தார்.
(அவள் , அவர்கள்) சந்தைக்குப் போகிறாள்.
(இது , இவை ) எங்கள் வீட்டு நாய்க்குட்டி.
(அது , அவை ) மரத்திலிருந்து கீழே விழுந்தன.
(நாங்கள் , நான் ) பந்து விளையாடினேன்.
(அவர்கள் , அவன்) பாடசாலைக்குச் சென்றார்கள்.
(நான் , நாங்கள் ) பாட்டுப் பாடுகிறேன்.
உன் தம்பி பொம்மையை உடைத்து (விட்டாள், விட்டான்)

3. **இடைவெளி நிரப்புக.(க, யி, வ், த, ன், ச, ள், ரு, ழ, ம்)** (1x10=10)

ஞா - று , திங் - ள் , செ - வாய், பு - ன், வியாழ - ,
வெ- ளி , -னி, கி -மை , மாத - , வ- டம்

4. பின்வரும் வசனங்கள் சரியா தவறா என்று குறியிடுக. (1x10=10)

சந்திரன் இரவில் ஒளி தரும். --
பசுவின் பால் கறுப்பு நிறம். --
நாய் வீட்டைக் காவல் காக்கும். --
மயில் தோகை விரித்து ஆடும். --
யானை மிகவும் சிறிய மிருகம். --
குதிரை வேகமாக ஓடும். --
கோழி முட்டை இடும். --
மான் மெதுவாக நடக்கும். --
சிங்கம் மிருகங்களின் அரசன். --
காகத்தின் நிறம் வெள்ளை. --

5. ஒரு சொல்லில் பதில் எழுதுக. (2x5=10)

உமது பெயர் என்ன?.

---

உமக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?.

---

நீர் எங்கே வசிக்கிறீர்?

---

தமிழர் கொண்டாடும் பண்டிகை ஒன்றின் பெயர் தருக.

---

தந்தையாரின் சகோதரர் எப்படி உம்மால் அழைக்கப்படுவார்?

---

6. ஒருமை, பன்மையாக எழுதுக. உ.ம் - மலை - மலைகள் (1x10=10)

1 குட்டிகள் -
2 அவர்கள் -
3 குருவிகள் -
4 இலைகள் -
5 படங்கள் -
6. மான் -
7. பழம் -
8. பூ -
9. சிறுமி -
10. சட்டை -

7. சரியான சொல்லின் கீழ் கீறிடுக. (2x5=10)

நாங்கள் நேற்றுச் (சாப்பிட்டோம், சாப்பிடுவோம்)
ராமு நாளைக்கு இங்கே (வந்தான், வருவான்)
சாரதா இப்போது பாடம் (படிக்கிறாள், படிப்பாள்)
அவர்கள் அடுத்த வருடம் 3ம் வகுப்புப் (படிக்கிறான், படிப்பார்கள்)
என் மாமாவுக்கு நேற்றுப் பரிசு (கிடைக்கும் , கிடைத்தது)

8. சரியான விடையைக் கோடிட்ட இடங்களில் எழுதுக. (2x5=10)

இதன் காதுகள் சுளகு போன்றது. ------ (புலி , யானை)

இது எலி பிடிக்கும். ---- (முயல் , பூனை)

இந்தப் பறவையால் உயரப் பறக்க முடியாது. ---. (கோழி , குருவி)

இது பால் தரும். ---. ( பசு , மீன்)

இதன் முட்டையை உணவாக உண்பார்கள். --- (குயில் , கோழி)

9. பெரிய பெட்டிக்குள் இருக்கும் பொருட்களைப் பொருத்தமாக பிரித்து சிறிய பெட்டிகளுள் வையுங்கள். (1x10=10)

| | | | |
|---|---|---|---|
| கத்தி, | பாடசாலைப்பை, | பேனா, | |
| சட்டி, | புத்தகம், | அடுப்பு | |
| கேத்தல் | கரண்டி | பானை | பென்சில் , |

10. பின்வருவனவற்றை இணைத்து வசனமாக்குக. (2x5=10)

| | | |
|---|---|---|
| நீ | | வந்தாய் |
| நாங்கள் | | போனோம் |
| எனது அப்பா | | பழம் வாங்கினார். |
| தங்கை | நேற்று | படம் பார்த்தாள் |
| நானும் அம்மாவும் | | பேசினோம் |
| அவர்கள் | | விளையாடினார்கள் |